தெரிவித்து, பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மேலும் இதிலே பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்ற காரணத்தினால் இந்த அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: ஒரே ஒரு விளக்கம். ஏற்கனவே துண்டிக்கப்பட்டிருக்கிற 310-க்கும் திரும்ப இணைப்பு தரப்படுமா?

திரு. சோ. அழகர்சாமி: இப்பொழுது துண்டிக்கப் பட்டிருக்கிற இடங்களில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் தனியாகப் பேசுங்கள். இது ஒத்திவைப்புத் தீர்மானம். அமைச்சரது பதிலுக்குப் பிறகு விவாதம் வேண்டாம்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

(5) அறிவிப்பு.

விதி 82-ன் கீழ் அமைச்சரது அறிக்கை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 82-வது விதியின் கீழ் அளிக்கப்படவிருக்கிற அறிக்கை தயாராக இல்லாததால், அந்த அறிக்கை நாளை தரப்படும் என்பதை பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, அறையிலே சொன்னீர்கள். நெசவாளர் சம்பந்தமாக எடுத்துக் கொள்கிறேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிற காரணத்தினால், அதை எடுத்துக் கொள்ள வேண்டும். பரமக்குடியிலும், கும்பக் கோணத்திலும், நெசவாளர்கள் கைதாகியிருப்பதால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையிலே இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னது உண்மை. அறிக்கை அமைச்சரிடம் முழுமையாக வராத காரணத்தினால், இன்றைக்கு விவரங்களை முழுமையாக சேகரித்து, நாளைக்கு அவசியம் தந்தாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். நாளைக்கு அவசியம் எடுத்துக்கொள்ளப்படும்.